

தேனி மாவட்டம் வைகை அணைப்பகுதியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் நீர்வளத்துறை சார்பில் பனை விதைகள் நடவு செய்யும் பணிகளை கலெக்டர் ரஞ்ஜீத்சிங் துவைக்கி வைத்தார்.

## சேவுகம்பட்டி பேரூராட்சியில்
# தூய்மை காவலர்களுக்கு தீபாவளி பரிசாக சீருடைகள், இனிப்புகள் வழங்கப்பட்டது



**வத்தலகுண்டு, அக்.17-**

திண்டுக்கல் மாவட்டம் சேவுகம்பட்டி பேரூராட்சியில் தீபாவளியை முன்னிட்டு பணிபுரியும் தூய்மை காவலர்கள் பணியாளர்களுக்கு சீருடைகள் பரிசு பொருட்களுடன் இனிப்பு வழங்கப்பட்டது,

இந்நிகழ்வில் பேரூராட்சி தலைவர் வனிதா தங்கராஜன் தலைமையில், சேவுகம் பட்டி பேரூர் தி.மு.க. நகர செயலாளர் தங்கராஜன், துணைத் தலைவர் தெய்வ ராணி விஜயன், பேரூராட்சி செயல் அலுவலர் ரமேஷ்பாபுஆகியோர்முன்னிலையில் பேரூராட்சி கவுன்சிலர்கள் சாந்தி, ராஜேந்திரன். பாண்டியம்மாள், ஜோதிமணி, தவ பாண்டியன். தனபால். நாகராணி, மாரியப்ப பிள்ளை, கோகிலா, பாலமுருகன். மற்றும் பேரூராட்சி அனைத்து பணியாளர்கள் தூய்மை காவலர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டார்கள், இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் இளநிலை பேரூராட்சி உதவியாளர் அம்மமுத்து நன்றி கூறினார்.

# செந்துறையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்



**நத்தம், அக்.17-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே செந்துறையில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடந்தது.

இதற்கு திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி தலைமை தாங்கினார். தாசில்தார் ஆறுமுகம்,மத்திய ஒன்றிய செயலாளர் சேக்சிக்கந்தர்பாட்சா, யூனியன் ஆணையாளர்கள் கிருஷ்ணன், ரவீந்திரன்,மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இந்த முகாமில் மகளிர் உரிமை தொகை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூகநலத்துறை, வீட்டுவசதி, ஆதிதிராவிடர் நலத்துறை உள்ளிட்ட 15 அரசு துறைகளின் சார்பில் பொதுமக்களிடம் இருந்து மனுக்கள் பெறப்பட்டது.முகாமில் திமுக மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்துகுமார்சாமி,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுந்தரமூர்த்தி உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அருப்புக்கோட்டையில் 100 நாடகள் வேலை வழங்கக்கோரி பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்



**அருப்புக்கோட்டை அக்.17-**

அருப்புக்கோட்டை பாலையம்பட்டி ஊராட்சியில் 100 நாள் பணியாளர்களுக்கு முழுமையான 100 நாள் பணி வழங்கவில்லை வருடத்திற்கு 15 தினம் மட்டும் வழங்குவதை கண்டித்தும் மேலும் அரசு அறிவித்தரூ 319க்கு பதில் ரூ220 ரூபாய் மட்டும் சம்பளம் வழங்குவதை கண்டித்து காவிரி வைகை கிருதுமால் குண்டாறு பாசன விவசாயிகள் கூட்டமைப்பினர் அருப்புக்கோட்டை ஒன்றிய அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சங்க மாவட்ட தலைவர் ராம் பாண்டியன், தலைமை வகித்தார். தன்னார்வலர் ராஜாராம் முன்னிலையில் வைத்தார்.

சங்க பொதுச் செயலாளர் சிவகங்கை அர்ஜுனன் மாவட்ட செயலாளர் கோபாலகிருஷ்ணன் அண்ணா கட்டுமான தொழிற்சங்க சித்தநாதன் காரியாபட்டி சபாபதி சேகர் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

நிகழ்ச்சியில் திருவிருந்தால்புரம் கருப்பசாமி, வேல் முருகன், காலனி ராணி, ராஜீவ் நகர் சித்தாய் அம்மாள், தீர்த்தக்கரை மணிமேகலை,

இபி காலனி மனோகரன், சண்முக வேல் நகர் இந்திரா உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட 100 நாள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# மதுரை: தனியார் வங்கி ஏ.டி.எம்.-ல் தீ விபத்து

**மதுரை, அக். 17-**

மதுரை கீரைத்துரை மகாகாளிப்பட்டி பகுதியில் தனியார் வங்கிக்கு சொந்தமான ஏ.டி.எம். ஒன்று இருந்தது. இந்த நிலையில், நேற்று காலை ஏ.டி.எம். இயந்திரத்தில் இருந்து புகை வரத் தொடங்கியது. அதனை தொடர்ந்து திடீரென தீப்பிடித்து எரியத்தொடங்கியது. தீ விபத்து காரணமாக ஏ.டி.எம். இயந்திரம் முற்றிலும் எரிந்து நாசமானதாக கூறப்படுகிறது. இது குறித்து உடனடியாக தீயணைப்புத்துறையினருக்கு தகவல் கொடுத்தனர். தகவலறிந்த தீணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அங்கு பற்றி எரிந்து கொண்டிருக்கும் தீயை போராடி தீயணைப்புத்துறையினர் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

### மார்ஸ் குளோபல் தத்தெடுப்பு வாரஇறுதியின்போது பொறுப்பான செல்லப்பிராணி வளர்ப்புக்கான தேசிய இயக்கமும் வழிநடத்தப்படுகிறது

**சேலம், அக் 17-**

டெல்லி அரசாங்கத்தின் புதிய வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து பொறுப்பான செல்லப்பிராணி வளர்ப்பு, மனிதாபிமான தெருநாய் மேலாண்மை பற்றிய உரையாடல்கள் அதிகரித்து வரும் நிலையில், 100+ ஆண்டு பாரம்பரியத்தைக் கொண்ட உலகளாவிய செல்லப்பிராணி பராமரிப்பு, சிற்றுண்டி, உணவு நிறுவனமான மார்ஸ், அதன் மார்ஸ் குளோபல் தத்தெடுப்பு வாரஇறுதி 2025 மூலம் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு முன்னோடி முயற்சியை தொடங்கியுள்ளது. 11 இந்திய நகரங்களில் நடைபெறும் இந்த பிரச்சாரத்தின் மூலம் தத்தெடுக்க, கற்றுக்கொள்ள மற்றும் செயல்பட 14 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், நூற்றுக்கணக்கான தன்னார்வலர்கள், ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் அணிதிரட்டப்பட்டனர்.

இந்த முன்முயற்சி அமெரிக்கா, இங்கிலாந்து, பிரேசில், மெக்ஸிகோ, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா உட்பட 20-க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள மார்ஸ் உலகளாவிய உருமாறிய இரண்டு உயிர்கள் முயற்சியின் ஒரு பகுதியாகும். இது குறித்து மார்ஸ் பெட்கேர் இந்தியாவின் நிர்வாக இயக்குநர் சலீல் மூர்த்தி கூறுகையில், இன்று இந்தியாவில் கிட்டத்தட்ட 70 மில்லியன் வீடற்ற பூனைகள் மற்றும் நாய்கள் உள்ளன. உலகின் வீடற்ற செல்லப்பிராணிகள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு இது. மேலும் ஒவ்வொரு தத்தெடுப்பும் இந்த சுமையைக் குறைக்கிறது. மார்ஸ் எக்ஸ்காம் இந்தியா கணக்கெடுப்பு, பத்து இந்திய செல்லப்பிராணி பெற்றோர்களில் ஒன்பது பேர் தங்கள் செல்லப்பிராணிகள் பதட்டத்தை நிர்வகிக்க உதவுவதாகக் கூறுவதாகவும், நான்கில் மூன்று பங்கிற்கும் மேற்பட்டவர்கள் தங்கள் தோழமையின் காரணமாக மிகவும் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் உணர்கிறார்கள் என்று கூறினார்.

# டாடா பிளே, டிடிஎச் பிரச்சாரத்தில் சமாஜ்தார் பானோ, டாடா பிளே லகாஓ வை துவங்கியுள்ளது

**சென்னை, அக் 17-**

டாடா பிளே, சமீபத்திய டிடிஎச் பிரச்சாரத்தில் 'சமாஜ்தார் பானோ, டாடா பிளே லகாஓ'வை துவங்கியுள்ளது. டாடா பிளே வழங்கும் நன்மைகள் வாடிக்கையாளர்களுக்கு எளிதாகவும், நகைச்சுவையுடன் தொடர்புடைய முறையிலும் விளக்கப்படுகின்றன.இந்த பிரச்சாரம், நாட்டின் தொலைக்காட்சி பார்வையாளர்களுக்கு ஒப்பில்லாத மதிப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ரூ.3,600 முன்பணம் செலுத்தியவுடன், டாடா பிளே சந்தாதாரர்கள் அதற்குச் சமமான அனைத்து உள்ளடக்கங்களையும் பெறுவர்.ஒவ்வொரு ரூபாயும் நேரடியாக பொழுதுபோக்கு அனுபவத்தின் செலவாகும். கூடுதலாக, எச்டி செட்-டாப் பாக்ஸ், டிஷ் ஆண்டெனா, ரிமோட் மற்றும் நடைமுறை செய்வதும் எந்த கூடுதல் செலவும் இல்லாமல் வழங்கப்படும். மேலும், டாடா பிளே மொபைல் அப்பிலிக்கேஷன் மூலம் விரும்பும் சேனல்களை எளிதாக தேர்வு செய்யலாம் என்பது இந்த பிரச்சாரம் எடுத்துரைக்கிறது.

இந்த பிரச்சாரம் குறித்து டாடா ப்ளேயின் மார்க்கெட்டிங் கம்யூனிகேஷன்ஸ் தலைவர் கிருஷ்ணேந்து தாஸ்குப்தா கூறுகையில், இந்த பிரச்சாரம் எளிமையான ஆனால் சக்திவாய்ந்த நுண்ணறிவில் நங்கூரமிடப்பட்டுள்ளது - அவர்கள் பார்க்க விரும்பும் பொழுதுபோக்கைத் தேர்ந்தெடுக்கும்போது, மக்கள் உண்மையிலேயே தேடுவது குழப்பத்தை விட தெளிவைத்தான். தேர்வுகள் பல இருந்தாலும், குழப்பம் இன்னும் அதிகமாக உள்ளது. ஒரு இலகுவான, தொடர்புபடுத்தக்கூடிய தருணத்தின் மூலம், எங்கள் விசித்திரமான ஆந்தை மற்றும் நகைச்சுவையான கழுதை நம்பகமான வழிகாட்டிகளாக நுழைந்து, முடிவெடுக்கும் செயல்முறையை எளிதாக உணர வைக்கிறது என்றார். மேலும் ஓகில்வி இந்தியாவின் தலைமை படைப்பு அதிகாரி சுகேஷ் நாயக் கூறுகையில், டாடா ப்ளேயைத் தேர்ந்தெடுப்பது அறிவுத்திறன் , ஏனெனில் அது பணத்திற்கு ஏற்ற மதிப்புள்ள சலுகைகளையும், உங்கள் பொழுதுபோக்கை உண்மையிலேயே அதிகப்படுத்த உதவும் பொதிகளையும் கொண்டுள்ளது என்று கூறினார்.

# லெக்சஸ் இந்தியா நிறுவனத்தின் புதிய எல்.எம். 350 எச் கார் அறிமுகம்

**சென்னை, அக் 17-**

லெக்சஸ் இந்தியா நிறுவனம் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட புதிய எல்எம் 350எச் காரை அறிமுகப்படுத்தியது. அல்ட்ரா-லக்ஸரி வாகன பிரிவை மறுவரையறை செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த கார், வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான வடிவமைப்பு, ஈடில்லாத ஆடம்பரம் மற்றும் அதிக சௌகரியங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. புதிய எல்எம் 350எச் இந்திய சந்தையில் பிரபலமாக வரவேற்பு பெற்றுள்ளது மற்றும் தலைசிறந்த சொகுசு பயண அனுபவத்திற்கான ஒரு புதிய தரநிலையை நிறுவியுள்ளது. கார் அல்ட்ரா-லக்ஸரி மொபிலிட்டி பிரிவில் முன்னணி நிலையை உறுதிப்படுத்த, லெக்சஸ் புதிய மேம்பாடுகளை அறிமுகம் செய்துள்ளது. இ20-விதிமுறைகளுக்குட்பட்ட இன்ஜின், பவர் ஸ்லைடிங் டோர் ஸ்விட்ச், ஆட்டோ-டிம்மிங் ஓஆர்விஎம் வசதி, மற்றும் புதிய பின்புற கன்சோல் டிரே போன்ற வசதிகள் பயணிகளுக்கான ஆடம்பரத்தை மேலும் உயர்த்துகின்றன.

இது குறித்து லெக்சஸ் இந்தியா நிறுவனத்தின் பிரதிநிதி ஹிகாரு இகுச்சி கூறுகையில், எல்எம் 350எச் காருக்கு எங்கள் வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்த வரவேற்பு நமக்கு பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்த அற்புதமான வாகனம் வடிவமைப்பு நுணுக்கம், கௌரவம் மற்றும் அதிநவீன சௌகரியத்துடன் ஒரு பிரத்யேக பிரைவேட் லவுஞ்ச் அனுபவத்தையும் வழங்குகிறது. புதிய எல்எம் 350எச் காரின் டெலிவரிகள் தொடங்குகின்றன என்று கூறினார்.

# ஒட்டன்சத்திரத்தில் ஜாக்டோ ஜியோ ஆர்ப்பாட்டம்



**ஒட்டன்சத்திரம்.செப். 17-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் ஜாக்டோ,ஜியோ சார்பில் தேர்தல் கால வாக்குறுதி படி பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி கோரிக்கை அட்டை அணிந்து பணி செய்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஒட்டன்சதித்தில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜாக்டோ ஜியோ நிர்வாகிகள் மகாராஜன், மணிமாறன், முத்துக்குமார், வேல்முருகன், லாசர், செல்வம் உள்ளிட்ட ஜாக்டோ ஜியோ நிர்வாகிகள்கலந்துகொண்டனர்.



மதுரை மாவட்ட ஆட்சியரகத்தில் சமூக நலன் மற்றும் உரிமைத்துறை ஒருங்கிணைந்து குழைந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் தேசிய ஊட்டசத்து மாதம் திட்டத்தின் கீழ் உலக உணவு தினத்தை முன்னிட்டு ஆரோக்கிய உணவு திருவிழாவை கலெக்டர் பிரவீன்குமார் துவக்கி வைத்து அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார்.

# திருமங்கலம் கிழக்கு ஒன்றியத்தில் 2500 பேருக்கு நலத்திட்ட உதவிகள்

## மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கினார்



**திருமங்கலம்,அக்.17-**

கலைஞரின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு திருமங்கலம் கிழக்கு ஒன்றியம் மேலக்கோட்டை ,பாரதி நகர் பகுதியில் வசித்திடும் பொதுமக்கள் 2500 பேருக்கு மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணி மாறன் வழங்கினார்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேட பட்டி மு.மணிமாறன் ஏற்பாட்டின் பேரில் திருமங்கலம் தொகுதியில் வசித்திடும் 1.50 லட்சம் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக திருமங்கலம் கிழக்கு ஒன்றியம் மேலக்கோட்டை, பாரதிநகர் பகுதி பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழா சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு திருமங்கலம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் தங்கப்பாண்டி தலைமை வகித்தார். மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கிருத்திகா தங்கப்பாண்டி முன்னிலை வகித்தார்.ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு போல் மேலக்கோட்டை, பாரதிநகர் பகுதி மக்கள் 2500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இதனை தொடர்ந்து விழாவில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு சிக்கன் பிரியாணியுடன் அசைவ விருந்து மற்றும் கிராமப்புற கிரிக்கெட் குழுக்களுக்கு கிரிக்கெட் பேட் மற்றும் விளையாட்டு உபகரணங்களை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கினார். முன்னதாக மாவட்டச் செயலாளர் சேட பட்டி மு. மணிமாறன் பேசுகையில்: கடந்த தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றி முதல்வர் மு.க.ஸ்டாலின் சாதனை படைத்துள்ளார். குறிப்பாக மகளிர் முன்னேற்றத்திற்கு எண்ணற்ற திட்டங்களை முதல்வர் செயல்படுத்தி வருகிறார். கடந்த ஆட்சியில் திருமங்கலம் தொகுதியில் வளர்ச்சிப் பணிகள் ஏதும் நடைபெறவில்லை. தற்போதைய திமுக ஆட்சியில் எண்ணற்ற வளர்ச்சி பணிகள் திருமங்கலம் தொகுதியில் நடைபெற்று வருகிறது. தி.மு.கவின் சிறப்பான ஆட்சிக்கு நீங்கள் தொடர்ந்து ஆதரவளித்திட வேண்டும் என்று பேசினார்.

இவ்விழாவில் திருமங்கலம் தொகுதி மேலிட பார்வையாளர் டிஸ்கோ அலாவுதீன்,ஒன்றிய செயலாளர் மதன்குமார், மாவட்ட அணி அமைப்பாளர்கள் விமல், சிவனேசன், பொதுக்குழு உறுப்பினர் சிவமுருகன், ஞானசேகரன், திருமங்கலம் நகர்மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணை தலைவர் ஆதவன் அதியமான், கட்சி நிர்வாகிகள் காளிதாஸ், மெப்கோ தொழிற்சங்க தலைவர் முத்துக்குமார், வக்கீல் கவிஸ்ரீ தினேஷ், அழகுமலை, கருவேலம்பட்டி வெற்றி, நிரஞ்சன், முத்துகுரு, காளிதாஸ், தனுஷ்கோடி, பாரதி, ரஞ்சித் மற்றும் திருமங்கலம் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நத்தத்தில் மருதநாயகம் பிள்ளை நினைவு தினம் அனுசரிப்பு



**நத்தம், அக்.17-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம்-கோவில்பட்டியில் தமிழ்வேள் முன்னேற்ற கழகம் சார்பில் மருதநாயகம் பிள்ளை நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

இதற்கு தமிழ்வேள் முன்னேற்ற கழக தலைவர் சரவணச்செல்வம் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் ரமேஷ்குமார், பொருளாளர் வெற்றிவேலன், துணை செயலாளர் செந்தில்குமார், முதன்மை செயலாளர் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.தொடர்ந்து அவரது படத்திற்கு மாலைகள் அணிவிக்கப்பட்டு மலர்தூவி மரியாதை செலுத்தபட்டது. இதில் தலைமை நிலைய செயலாளர் பழனி முருகானந்தம், அமைப்பு செயலாளர் அருண்பாண்டியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவு நாளை முன்னிட்டு நேதாஜி சுபாஷ் சேனை நிறுவன தலைவர் வழக்கறிஞர் டாக்டர் வி.மகாராஜன் ஆணைக்கிணங்க மாநில செயலாளர் எம்.சுமன் தேவர் தலைமையில் மதுரை மாவட்ட தலைவர் பி.எம்.ராஜா மாறன் ஏற்பாட்டில் மதுரையில் உள்ள அவரது உருவசிலைக்கு நிர்வாகிகள் வீர வணக்கம் செலுத்தினர். இதில் தத்தனேரி கார்த்திக், தத்தனேரி தர்மராஜ், ரத்தினவேல் பாண்டியன்,மகாபிரபு, அருண் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# நெற்குப்பையில் இலக்கிய நிகழ்ச்சி



**மதுரை, அக்.17-**

நெற்குப்பை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவை முன்னிட்டு ஏராளமான இலக்கியம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பேருதவி புரிந்தவர்களுக்குப் பாராட்டு விழா மிகச் சிறப்பாக பல்லாயிரம் மக்கள் பங்கேற்புடன் நடைபெற்றது.

பெரும் கொடையாளர், செயல் செம்மல் பழ. வயிரவன் அனைத்துப் பணிகளும் மேன்மையுடன் நடைபெற சுற்றிச் சுழன்று பணியாற்றினார். திருப்பணிக் குழுத் தலைவர், ரோட்டரி சங்கத்தின் மேனாள் ஆளுநர் எஸ். முத்து பழனியப்பன், துணைத் தலைவர் ராம. பழனியப்பன், செயலாளர் மு.ச.செல்வநாதன், இணைச் செயலாளர் மரு. சுவாமிநாதன், பொருளாளர் எஸ்பி. காசி விஸ்வநாதன், நடப்பு காரியக்காரரர்கள் கேஎன். ராமசெல்வம் எஸ் . தியாகராஜன் மற்றும் திருப்பணிக் குழு பெருமக்கள் முன்னிலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. எனது பெரிய ஆச்சி விசாலாட்சி சொக்கலிங்கம் அவர்கள் ஊர் என்பது இரட்டிப்பு மகிழ்ச்சி.

சனிக்கிழமை நண்பகல் கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத் தேனீ ரா.சொக்கலிங்கம் ஆச்சிமார்கள் அன்றும் இன்றும் என்ற தலைப்பில் எழுபது நிமிடங்கள் பேசுகையில் ஒவ்வொரு ஐம்பது ஆண்டுகளுக்கும் மனிதகுல வாழ்வியல் முறை மாறிக் கொண்டு உள்ளது. ஆதிமனிதன் கற்களை உரசி அதன் வெளிச்சத்தில் தனது வாழ்கையை நடத்தி பின்னர் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் நடத்தி இப்பொழுது மின்சாரம் நம்மை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

ஆச்சிமார்கள் அன்று தாய் தந்தையின் பேச்சைக் கேட்டு தங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டனர். இன்று பெண்கள் உயர்கல்வி கற்று உலகம் முழுவதும் மிகப் பெரிய அளவில் தங்கள் பேராற்றல் மூலம் உயர்ந்து வருகின்றனர்.
பெரும் அளவில் ஊதியம் பெறும் நிலை. அதற்கேற்ப அவர்கள் வாழ்வில் மாற்றங்கள் நடக்கின்றன. ஒரு காலத்தில் பெண் குழந்தை வேண்டாம் என்றும் கள்ளிப்பால் கலாச்சாரம் நடந்ததை நாம் மறந்து விட முடியாது. இனி வரும் காலங்களில் பெண் குழந்தைகள் பெற்றிட தவம் செய்வார்கள். தையலை உயர் செய் என்றார் மகாகவி பாரதி. இன்று உலக மயமாக்கலில் பெண்கள் பங்களிப்பு மிகவும் அதிகம். பழைய ஒப்பீடுகள் இனி பயனளிக்குமா என்ற கேள்வி எழுகிறது. ஆச்சியை கலந்து சொல்கிறேன் என்பதும், நல்ல பண்புகளை அன்று அவர்கள் முன்னெடுத்ததும் இன்றும் அதன் சிறப்பை நம்மால் உணர முடிகிறது. பெண்களைப் போற்றுகின்ற மதிக்கின்றவர்கள் தான் சிறப்பான நிம்மதியான வாழ்வைப் பெற்றிட முடியும் என்றார்.

இலக்கிய நிகழ்ச்சி எஸ். கதிரேசன்,ஆர் எம். முத்து, எஸ். லெட்சுமணன் மற்ற பணிகளை வாஸ்து எஸ்.ராஜா, ராஜேந்திரன் , ஐயப்பன், மற்றும் குழுவினர் சிறப்பாகச் செய்திருந்தனர். நிகழ்ச்சிகளை ராம்குமார் சிங்காரம், பெரி. அழகம்மை ஆறுமுகம், சா. நித்யகல்யாணி, சுப. கண்ணாத்தாள் மிகச் சிறப்பாக தொகுத்து வழங்கினர்.

விழாவில் செந்தூரான் ராம. வயிரவன், பெரியவர் எம். திருநாவுக்கரசு செட்டியார், சேதுராமன் சாத்தப்பன், சிங்கப்பூர் தி. ராஜா, விசு. சொக்கலிங்கம், கவிஞர் சி. லெட்சுமணன், பங்களா பழனியப்பன், திருச்சி கே கே நகரத்தார் நகர் சங்கச் செயலாளர் பழனியப்பன், பனையப்பன், டிராவல்ஸ் பழனியப்பன், எஸ். கண்ணன், எனது பள்ளிக் கால நண்பர் எம் பி சாத்தப்பன், மணிவண்ணன் தமிழண்ணல், வழக்கறிஞர் ராமரத்தினம், ஆர்எம். சொக்கலிங்கம், திருப்பதி சிங்காரம், ஏஆர். கணேசன், டிஆர். பழனியப்பன் உள்ளிட்ட ஏராளமான பெருமக்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

மகாகவி பாரதி யாவரையும் மதித்து வாழ் என்றார் அந்த வரிகளுக்கு வடிவம் தரும் வகையில் இரண்டு நாட்களும் மிகச் சிறந்த உணவு விருந்து ஊர் மக்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. சிறப்பான உணவு நளபாக நாயகர் செவ்வூர் பாண்டி சகோதரர்கள். யாகசாலை மற்றும் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா பணிகள், வாகன நிறுத்தம் என எதிலும் மிக நேர்த்தியாக இருந்தது நெற்குப்பை நகரத்தார்களின் ஒற்றுமைக்கு கூடுதல் பலமாக அமைந்தது.

## லபுவான் பாஜோ, மேடான், பலேம்பாங் செமராங் ஆகிய இடங்களுக்கு புதிய விமான சேவைகள் 'ஸ்கூட்' தொடக்கம்

**திருச்சி, அக்.17-**

சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்-ன் குறைந்த கட்டண துணை நிறுவனமான ஸ்கூட், லபுவான் பாஜோ, மேடான், பலெம்பாங் மற்றும் செமராங் ஆகிய இடங்களுக்கான புதிய விமான சேவைகளைத் தொடங்குவதாக அறிவித்துள்ளது. இந்த விமானங்கள் டிசம்பர் 2025 மற்றும் பிப்ரவரி 2026-க்கு இடையில் படிப்படியாகத் தொடங்கப்படும், இது இந்தோனேசியாவில் ஸ்கூட்டின் இருப்பை வலுப்படுத்துவதுடன் வாடிக்கையாளர்களுக்கு மேலும் பலதரப்பட்ட பயண அனுபவங்களை வழங்கும். இந்தோனேசியாவின் ஃப்ளோரஸ் தீவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள லபுவான் பாஜோ, அதன் தூய்மையான கடற்கரைகள், அழகான பவளப்பாறைகள் புகழ்பெற்றது. 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் தேதி முதல், ஸ்கூட் நிறுவனம் எம்பிரேயர் இ190-இ2 விமானம் மூலம் லபுவான் பாஜோவிற்கு வாரத்திற்கு இரண்டு முறை விமானச் சேவையைத் தொடங்க உள்ளது. வடக்கு சுமத்ராவின் தலைநகரான மேடானுக்கு ஸ்கூட் விமான நிறுவனம் பிப்ரவரி 1, 2026 முதல் ஏர்பஸ் ஏ320 குடும்ப விமானங்களில் மேடானுக்கு தினசரி விமானச் சேவையைத் தொடங்க உள்ளது. தெற்கு சுமத்ராவின் தலைநகரமான பலெம்பாங் இந்தோனேசியாவின் பழமையான நகரங்களில் ஒன்றாகும். பலெம்பாங் பெரிய பள்ளிவாசல் மற்றும் சுல்தான் மஹ்மூத் பதருதீன் II அருங்காட்சியகம் போன்ற முக்கியமான அடையாளங்களுக்காக இது புகழ்பெற்றது.. ஜனவரி 15, 2026 முதல், ஸ்கூட் விமான நிறுவனம் எம்பிரேயர் இ190-இ2 விமானத்தில் பலெம்பாங்கிற்கு வாரத்திற்கு நான்கு முறை விமானங்களை இயக்கத் தொடங்கும். சென்ட்ரல் ஜாவாவின் பரபரப்பான தலைநகரான செமராங் வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் டச்சு காலனித்துவ கட்டிடக்கலையை கொண்ட ஒரு நகரம் ஆகும். ஸ்கூட் விமான நிறுவனம் ஏர்பஸ் ஏ320 குடும்ப விமானங்களைப் பயன்படுத்தி, 2025 டிசம்பர் 23 முதல் செமராங்கிற்கு வாரத்திற்கு மூன்று முறை விமானச் சேவைகளைத் தொடங்க உள்ளது. இது 2026 ஜனவரி 1 முதல் வாரத்திற்கு நான்கு முறை என அதிகரிக்கப்படும். ஸ்கூட் தலைமைச் செயல் அதிகாரியான லெஸ்லி தங் கூறுகையில், "லபுவான் பாஜோ, மேடான், பாலெம்பாங் மற்றும் செமராங் ஆகிய இடங்களுக்கு புதிய விமானச் சேவைகளைத் தொடங்குவதன் மூலம், இந்தோனேசியாவில் ஸ்கூட்டின் இருப்பை வலுப்படுத்துவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். இந்தப் புதிய சேவைகள், தென்கிழக்கு ஆசியாவில் எங்கள் பிணைய இணைப்பை வலுப்படுத்தவும், புதிய வாய்ப்புகளைபயன்படுத்துவோம்" என்றார். லபுவான் பாஜோ, மேடான், பலேம்பாங் மற்றும் செமராங் ஆகிய இடங்களுக்கான சேவைகளைத் தொடங்குவதன் மூலம், ஸ்கூட் பிப்ரவரி 2026 முதல் இந்தோனேசியாவில் உள்ள 15 நகரங்களுக்கு வாராந்திரமாக 120-க்கும் மேற்பட்ட விமானங்களை இயக்கும். ஸ்கூட்டின் வலையமைப்பு ஆசியா பசிபிக், மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா முழுவதும் 18 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் 83 இடங்களாக வளரும்.

## ரன்வீர் சிங்குடன் இணைந்து எக்ஸ்பீரியன்ஸ் அபுதாபியின் புதிய பிராண்ட் தூதர் ஆனார் தீபிகா படுகோன்

**சென்னை, அக்.17-**

அபுதாபியின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறையின் பிராண்டான 'எக்ஸ்பீரியன்ஸ் அபுதாபி', தீபிகா படுகோனை புதிய பிராந்திய பிராண்ட் தூதராக அறிவித்துள்ளது. இந்த விளம்பரப் படத்தில் அவருடைய கணவரும் பாலிவுட் ஐகானுமான ரன்வீர் சிங்குடன் தீபிகா இணைகிறார்.

2023 முதல் எக்ஸ்பீரியன்ஸ் அபுதாபியின் பிராண்ட் தூதராக ரன்வீர் சிங் இருந்துவருகிறார். அந்த வகையில் அதிகாரப்பூர்வமாக இந்த இடத்தை ஒன்றாக பிரதிநிதித்துவப்படுத்தும் முதல் பாலிவுட் பவர் ஜோடியாக அவர்களை ஆக்குகிறது. உலகெங்கிலும் உள்ள பயணிகளுடன் அபுதாபி எப்படி தனிப்பட்ட வகையிலும், உண்மையானதாக உணரும் விதத்திலும் ஒன்றிணைகிறது என்பதை இருவரும் இந்த விளம்பரத்தில் வெளிப்படுத்துகிறார்கள்.

இந்தியாவிலும் வெளியிலும் உள்ள ரசிகர்களின் விருப்பமான உலகளாவிய ஈர்ப்பைக் கொண்ட தீபிகா, தனது அபுதாபி பயணத்தைப் பற்றி இந்த விளம்பரப்படத்தில் பகிர்ந்து கொள்கிறார். இந்த நகரத்தின் அனுபவங்கள் நிறைந்த இடமாகவும், அனைவரும் பார்க்க, ஏதாவது செய்ய, புதியவைகளைக் கண்டறிய ஏதாவது ஒன்றை அவர் இதில் வெளிப்படுத்துகிறார்.

## ரேபிடோ, கோயிபிபோ, ரெட்பஸ், கன்பார்ம் டிக்கெட் இணைந்து ஒரே இடத்தில் அனைத்து பயண வசதிகளும் கொண்ட செயலி இந்தியாவில் அறிமுகம்

**கோவை, அக்.17-**

இந்தியாவின் முன்னணி ரைட்ஷேரிங் தளமான ரேபிடோ, கோயிபிபோ, ரெட்பஸ் மற்றும் கன்பார்ம் டிக்கெட் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து, மொபிலிட்டி துறையில் இந்தியாவின் முதல் உள்நாட்டு ஒன்-ஸ்டாப் பயண தீர்வை அறிமுகப்படுத்தியுள்ளது. இப்போது பயனர்கள் ஒரே ரேபிடோ செயலி மூலம் விமானங்கள், ஹோட்டல்கள், பேருந்துகள், மற்றும் ரயில் முன்பதிவுகள் அனைத்தையும் செய்யலாம். இது தினசரி பயணங்களிலிருந்து நீண்ட தூர விடுமுறை திட்டங்கள் வரை அனைத்தையும் ஒரே இடத்தில் நிர்வகிக்க வழி வகுக்கிறது. இது குறித்து ரேபிடோ இணை நிறுவனர் அரவிந்த் சங்கா கூறுகையில், பயணத்தை எளிமைப்படுத்தி, மலிவு விலையில் அனைவருக்கும் அணுகக்கூடியதாக மாற்றுவது எங்கள் நோக்கம். இந்த அறிமுகம் மூலம் தினசரி சவாரிகளிலிருந்து நீண்ட தூரப் பயணங்கள்வரை ரேபிடோ ஒரு உண்மையான ஒன்-ஸ்டாப் கூட்டாளியாக மாறுகிறது என்றார். மேலும் மேக் மை டிரிப் இணை நிறுவனர் மற்றும் குழு தலைமை நிர்வாக அதிகாரி ராஜேஷ் மாகோவ் கூறுகையில், இந்த கூட்டாண்மை டயர் 2 மற்றும் 3 நகரங்களில் உள்ள பயனர்களிடையே டிஜிட்டல் பயணத்தை விரிவுபடுத்தும் என்று கூறினார்.

மேலும் கன்பார்ம் டிக்கெட் & ஐஆர்சிடிசி ரயில்களின் தலைமை நிர்வாக அதிகாரி தினேஷ் குமார் கோதா கூறுகையில், இந்த கூட்டாண்மை மூலம் ரயில் பயணங்கள் மேலும் எளிதாகவும் நம்பகமாகவும் மாறும். ரேபிடோ சுற்றுச்சூழல் ரயில்களை இணைப்பதன் மூலம் பயணிகளுக்கு அதிக வசதி மற்றும் மலிவு விலை வழங்கும் என்றார். 50 மில்லியனுக்கும் மேற்பட்ட பயனர்களுடன் ரேபிடோ, இந்தியாவின் அன்றாட மற்றும் நீண்ட தூர பயணத்தை ஒருங்கிணைத்து, புதிய டிஜிட்டல் பயண யுகத்தை உருவாக்குகிறது.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

# திருவனந்தபுரம்-மதுரை அம்ரிதா ரயில் ராமேசுவரம் வரை நீட்டிப்பு

**மதுரை, அக். 17-**

திருவனந்தபுரம்-மதுரை அம்ரிதா ரயில் ராமேசுவரம் வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

மதுரையில் இருந்து அம்ரிதா எக்ஸ்பிரஸ் ரயில் திண்டுக்கல், பழனி, பொள்ளாச்சி, பாலக்காடு வழியாக திருவனந்தபுரம் செல்கிறது. பயணிகளின் வசதிக்காக இந்த ரயிலை ராமேசுவரம் வரை நீட்டிப்பு செய்ய ரயில்வே வாரியம் கடந்த 2023-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஒப்புதல் கொடுத்தது. அதனை தொடர்ந்து, நேற்று (வியாழக்கிழமை) முதல் இந்த ரயில் உரிய நேர மாற்றங்களுடன் மதுரையில் இருந்து ராமேசுவரத்துக்கு நீட்டிப்பு செய்து இயக்கப்படுகிறது.

ராமேசுவரத்தில் இருந்து இந்த ரயில் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் மதுரை வழியாக திருவனந்தபுரம் செல்லும். இந்த ரயில் திருவனந்தபுரத்தில் இருந்து இரவு 8.30 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 8.35 மணிக்கு திண்டுக்கல் ரயில் நிலையமும், காலை 9.50 மணிக்கு மதுரை ரயில் நிலையமும் வந்தடைகிறது. மானாமதுரைக்கு காலை 10.30 மணிக்கும், பரமக்குடியில் இருந்து காலை 10.52 மணிக்கும், ராமநாதபுரத்தில் இருந்து பகல் 11.15 மணிக்கும் புறப்பட்டு மதியம் 12.45 மணிக்கு ராமேசுவரம் சென்றடைகிறது. மறுமார்க்கத்தில், ராமேசுவரத்தில் இருந்து மதியம் 1.30 மணிக்கு புறப்பட்டு மதியம் 2.13 மணிக்கு ராமநாதபுரம் ரயில் நிலையமும், மதியம் 2.38 மணிக்கு பரமக்குடிக்கும், மாலை 3.05 மணிக்கு மானாமதுரைக்கும், மாலை 4.05 மணிக்கு மதுரைக்கும் வந்தடைகிறது. மாலை 5.10 மணிக்கு திண்டுக்கல் ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு மறுநாள் அதிகாலை 4.55 மணிக்கு திருவனந்தபுரம் சென்றடைகிறது.

இந்த ரயிலில், ஒரு முதல் வகுப்புடன் கூடிய 2-அடுக்கு குளிரூட்டப்பட்ட பெட்டி, ஒரு 2-அடுக்கு குளிரூட்டப்பட்ட பெட்டி, 3 மூன்றடுக்கு குளிரூட்டப்பட்ட பெட்டிகள், 12 இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டிகள், 4 பொதுப் பெட்டிகள் இணைக்கப்பட்டு இருக்கும்.

## நித்தியானந்தா, சீடர்கள் மீதான வழக்கு: 3 மாதத்தில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய ஐகோர்ட் உத்தரவு



**மதுரை, அக். 17-**

நித்தியானந்தா, சீடர்கள் மீதான வழக்கு 3 மாதத்தில் விசாரித்து இறுதி அறிக்கையை வெளிட வேண்டும் என்று ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் பகுதியைச் சேர்ந்த கணேஷ், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:-

கடந்த 26 ஆண்டுகளாக டாக்டராக பணியாற்றி வருகிறேன். எனக்கு சொந்தமான விவசாய நிலங்களை நித்தியானந்தா தியான பீடத்திற்கு நன்கொடையாக வழங்கினேன். இந்த நிலையில் நித்தியானந்தா மீதான புகார்களால் அவர் மீது அதிருப்தி அடைந்தேன். இதனால் நித்தியானந்தா பீடத்திற்கு வழங்கிய நிலத்தை திரும்ப பெற்றேன். அதனால் ஆத்திரம் அடைந்த அவரது சீடர்கள் என் நிலத்துக்குள் புகுந்து, அதனை ஆக்கிரமிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதுதொடர்பான புகாரின்பேரில் ராஜபாளையம் கிழக்கு மற்றும் சேத்தூர் போலீசார் வழக்குபதிவு செய்து உள்ளனர்.

இந்தநிலையில் என்னைப்பற்றியும், குடும்பத்தினர் குறித்தும் சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பினர். இதுகுறித்த புகாரின்பேரில் நித்தியானந்தா உள்ளிட்டவர்கள் மீது விருதுநகர் சைபர் கிரைம் போலீசார் வழக்குபதிவு செய்தனர். கடந்த ஓராண்டாகியும் விசாரணையை போலீசார் விரைவுபடுத்தவில்லை. எனவே அந்த வழக்கின் விசாரணையை விரைவாக முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும். இவ்வாறு அதில் கூறி இருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி சுந்தர் மோகன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, மனுதாரர் புகாரின்பேரில் பதிவு செய்த வழக்கை 3 மாதத்தில் விசாரித்து இறுதி அறிக்கையை போலீசார் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார்.

## தீபாவளி பொருட்களை வாங்க மதுரை கடைகளில் குவிந்த மக்கள்

**மதுரை, அக். 17-**

தீபாவளி நெருங்குவதால், ஆடை, அணிகலன்கள் வாங்க மதுரை சந்தைப் பகுதிகளில் மக்கள் குவிந்தனர். பாதுகாப்பு பணியில் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 3 தினங்களே உள்ள நிலையில் ஒவ்வொரு நிறுவனங்களும் போட்டி போட்டு தள்ளுபடி அறிவித்து, இன்ப அதிர்ச்சி கொடுத்து வருகிறார்கள். மதுரையில் தெற்கு மாசி வீதி, மேல மாசி வீதி, கீழ மாசி வீதின்னு மாசி வீதிகளில் மக்கள் கூட்டம் அலை மோதுகிறது. ஆடை, அணிகலன்கள் மற்றும் வீட்டுக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்கள் தள்ளுபடியில் வாங்க பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில இனி போகப்போக கூட்டம் அதிகரிக்கும் என்பதால் பொதுமக்கள் பொருட்களை வாங்க கடைவீதிகளில் குவிந்ததால், இந்த தெருக்கள் களை கட்டி வருகிறது.

மதுரை மாவட்டம் அல்லாது சிவகங்கை, திண்டுக்கல், விருதுநகர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும், மதுரை வந்து பொருள்களை வாங்கிச் செல்ல ஆர்வம் காட்டி வருகிறார்கள். மக்கள் பாதுகாப்புக்காக பலத்த போலீஸ் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் தங்களது உடைமைகளையும், நகைகளையும் வாங்கிய பொருள்களையும் பத்திரமாகப் பார்த்துக்கொள்ள காவல்துறையினர் அறிவுறுத்தி வருகிறார்கள்.

### ENROLLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within 3 months there after I, RUBILA.V, D/O, M. VIJAYAKUMAR. Aged 23 years, permanently residing at No: 8/16, AYYA COMPOUND, JEGANATHAN STREET, OLD TVS ROAD, THENI - 625 531, Tamilnadu intend having my enrollment as an advocate moved before the Bar Council of Tamilnadu & Puducherry, Bar Council Buildings, High Court campus, Chennai-104. Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.

RUBILA.V

# மதுரை புதிய மேயர் இன்று தேர்வு

**மதுரை, அக். 17-**

மதுரையில் வரி விதிப்பில் பல கோடி ரூபாய் முறைகேடு நடந்ததை முன்னிட்டு மதுரை மேயர் ராஜினாமா செய்தார். அதனை தொடர்ந்து இன்று புதிய மேயர் தேர்வு நடக்கிறது.

மதுரை மாநகராட்சியில் தி.மு.க.வை சேர்ந்த இந்திராணி (வயது 45) மேயராக இருந்து வந்தார். இவருடைய கணவர் பொன் வசந்த். இவர் தி.மு.க. நிர்வாகியாக இருந்து வந்தார். இவர் மாநகராட்சி நடவடிக்கைகளில் தலையீடு செய்வதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இது சில நேரங்களில் சர்ச்சையாகவும் மாறியது.

இந்நிலையில் மதுரை மாநகராட்சியில் வணிக வளாகங்கள், தொழில் நிறுவனங்கள், கடைகள் உள்ளிட்ட ஏராளமான சொத்துகளுக்கு வரியை குறைத்து மதிப்பீடு செய்து, அதன் மூலம் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இது சம்பந்தமாக முன்பு மாநகராட்சி கமிஷனராக இருந்த தினேஷ்குமார் விசாரணை நடத்தினார். மேலும் இந்த விவகாரத்தில் கோர்ட் உத்தரவின்படி ஐ.பி.எஸ். அதிகாரிகள் கொண்ட சிறப்பு குழுவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் மற்றொரு திருப்பமாக மேயரின் கணவர் பொன்வசந்த் சென்னையில் கடந்த ஆகஸ்டு மாதம் 12-ந்தேதி கைது செய்யப்பட்டார். விசாரணைக்கு பின்னர் அவர் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டு, சில நாட்களுக்கு முன்புதான் ஜாமீனில் வெளியே வந்து இருந்தார்.

இந்த நிலையில் கடந்த 3 தினங்களுக்கு முன்பு இரவு திடீரென்று மேயர் பதவியில் இருந்து இந்திராணி விலகினார். இதற்காக மாநகராட்சி கமிஷனர் சித்ரா விஜயனை சந்தித்தார். தனது குடும்ப சூழ்நிலை காரணமாக மேயர் பதவியை ராஜினாமா செய்வதாக கடிதம் கொடுத்தார். அந்த கடிதத்தை கமிஷனர் பெற்றுக்கொண்டு உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார்.

### அடுத்த மேயர் யார்..?

மேயர் இந்திராணி ராஜினாமா செய்த நிலையில், அடுத்த மேயர் யார்? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. தி.மு.க. பெண் கவுன்சிலர்களில் ஒருவருக்குத்தான் அந்த வாய்ப்பு கிடைக்க போகிறது. இதுசம்பந்தமாக தி.மு.க. கவுன்சிலர்கள் வட்டாரத்தில் கேட்டபோது, "மாநகராட்சி அவசர கூட்டம் இன்று (வெள்ளிக்கிழமை) நடக்க இருக்கிறது. அதில் இந்திராணியின் ராஜினாமா கடிதம் ஏற்கப்பட்டு, புதிய மேயர் தேர்வு செய்யப்பட வாய்ப்பு உள்ளது. மதுரையில் தி.மு.க. மூத்த நிர்வாகியின் நெருங்கிய ஆதரவாளராக இருந்துவரும் பெண் கவுன்சிலர் உள்பட 7 பெண் கவுன்சிலர்களின் பெயர்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது. அவர்களில் ஒருவருக்குத்தான் வாய்ப்பு கிடைக்கும் என்றே தெரிகிறது" என்று கூறினர்.

## மதுரை ஜிகர்தண்டா, கீழக்கரை தொதல் அல்வா உள்பட 10 பொருட்களுக்கு புவிசார் குறியீடு கேட்டு விண்ணப்பம்

**சென்னை, அக். 17-**

மதுரை ஜிகர்தண்டா, கீழக்கரை தொதல் அல்வா உள்பட 10 பொருட்களுக்கு புவிசார் குறியீடு கேட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் உயர் கல்வித்துறையின்கீழ் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் இயங்கி வருகிறது. இந்த மன்றத்தின் ஒரு அங்கமான காப்புரிமை தகவல் மையம், மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து காப்புரிமைகள், பதிப்புரிமைகள் வர்த்தக குறியீடுகள், தொழில்துறை வடிவமைப்புகள், புவிசார் குறியீடுகள் போன்ற அறிவுசார் சொத்துரிமைக்கு மாநில அளவிலான உதவிகளை வழங்குகிறது.

அந்த வகையில் ஒரு பொருளின் தரம், தனித்துவம் மற்றும் நன்மதிப்பை உறுதிப்படுத்தும் வகையில் வழங்கப்படக் கூடிய புவிசார் குறியீடு பெற தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த புவிசார் குறியீடு விவசாயம், இயற்கை, கைவினை, உணவு பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், தயாரிப்புகளுக்கு சட்டப்பாதுகாப்பு வழங்குவதற்கும், அங்கீகரிக்கப்படாத முறையில் பயன்படுத்துவதை தடுக்கவும் புவிசார் குறியீடு முக்கியமாக கருதப்படுகிறது. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்ற நடவடிக்கையின் பலனாக புவிசார் குறியீடு பதிவில் தமிழ்நாடு முதலிடத்தில் இருந்து வருகிறது. இதுவரை 14 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்காக விண்ணப்பித்திருக்கிறது.

இதில் தஞ்சாவூர் வீணை, திண்டுக்கல் பூட்டு, கொடைக்கானல் மலை பூண்டு, உடன்குடி பனங்கருப்பட்டி ஆகிய 4 பொருட்களுக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. அதிலும் இந்தியாவிலேயே புவிசார் குறியீடு பெற்ற முதல் இசைக் கருவியாக தஞ்சாவூர் வீணை உள்ளது குறிப்பிடத்தக்கது. இதுமட்டுமல்லாமல், கடந்த 7 மாதங்களில் அதாவது கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து இதுவரை 10 பொருட்களை அடையாளம் கண்டு அதற்கு புவிசார் குறியீடு கேட்டு, புவிசார் குறியீடு பதிவு அலுவலகத்தில், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் காப்புரிமை தகவல் மையம் விண்ணப்பம் செய்ய உதவியுள்ளது.

இந்த பட்டியலில், ஜவ்வாது புளி, வந்தவாசி கோரைப்பாய், கொல்லி மலை காபி, கொல்லிமலை பலாப்பழம், பொள்ளாச்சி தென்னை நார், முகவை குழியடிச்சான் சிவப்பு அரிசி, மதுரை அப்பளம், கீழக்கரை தொதல் அல்வா, மதுரை ஜிகர்தண்டா, கன்னியாகுமரி நன்னாரி ஆகியவை அடங்கும் என தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்ற உறுப்பினர் செயலர் ச.வின்சென்ட் தெரிவித்தார்.

## சிலைமான் கிராமத்தில் கிராம சபை கூட்டம்

**மதுரை, அக்.17-**

மதுரை திருப்பரங்குன்றம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தை சார்ந்த சிலைமான் கிராமத்தில் இன்று கிராம சபை கூட்டம் நடைபெற்றது இந்த கூட்டத்தில் சொந்த ஊரில் கிராமசபை கூட்டத்தில் கலந்து கொண்டு விவாதம் செய்தேன் பல வேலைகள் செய்ய வேண்டும் கோரிக்கைகள் வைத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது ஒவ்வொரு முறையும் கிராமசபை கூட்டத்தில் நான் கலந்து கொள்வது வழக்கம் இந்த முறை ஆண்கள் பெருவாதியாக கலந்து கொள்ளவில்லை பெண்களின் கூட்டம் அதிகமாக காணப்பட்டது துறை ரீதியான அலுவலர்கள் வந்திருந்தார்கள் ஒவ்வொரு துறையிலும் நான் விவாதம் செய்து பொதுமக்களுக்கு பயனடைய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது சமூக ஆர்வலராக பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறேன் பல ஊர்களுக்கு நன்மை தேடிக் கொடுத்திருக்கிறேன் அந்த நோக்கத்தில் ஒவ்வொரு முறையும் கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டு விவாதம் செய்கிறேன் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகிறது ஆனால் தீர்மானத்தின் நகல்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலகத்திற்கு போய் சேருகிறதா என்பதை தெரியவில்லை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காரியங்கள் எல்லாம் நடக்கும இல்லையா என்பது தெரியவில்லை எனக்குத் தான் வெளிச்சம் முடிந்த அளவிற்கு நன்மை செய்வோம் நான் கடந்த காலங்களில் எங்கள் ஊர் பள்ளிக்கூடத்திற்கு 11 12 ஆம் வகுப்பு நிறைவேற்றி வதற்காக கடந்த திமுக ஆட்சியில் தங்கம் தன்னரசு அமைச்சராக இருந்த பொழுது கடுமையாக முயற்சி செய்து என்னுடைய பத்திரிகைகளின் செய்திகள் வெளியிட்டு பெற்றுக் கொடுத்தேன் அதற்கு அப்புறம் சுஅதற்கு அப்புறம் சிலைமான் சக்கிமங்கலம் பாலம் கட்டுவதற்கு சட்டசபையில் பேசப்பட்டார்கள் அது சம்பந்தமாக அதே போல் எங்கள் ஊர் பள்ளிக்கூடத்திற்காக ஏ கே போஸ் எம்எல்ஏ அவர்களே சட்டசபையில் பேச வைத்தேன் கம்யூனிஸ்ட் எம்எல்ஏ மாரி முத்து நாகபட்டினம் அவர்கள் சட்டசபையில் பேசினார்கள் இப்படி கடுமையான முயற்சி செய்தேன் இதே போல் பல விஷயங்கள் பல வேலைகள் நிலை கிராமத்திற்கு வந்து சேர்வதற்காக விளம்பரமே இல்லாமல் நான் பணியாற்றி இருக்கின்றேன் காலங்கள் கடந்து விட்டது என்பதால் தற்சமயம் கிராம சபை கூட்டங்களில் எங்கள் ஊர் பெரியவர்கள் என் அறிவுரை தலை நான் கலந்து கொள்கிறேன் குறிப்பிடத்தக்கது

---

கனம் சார்பு நீதிமன்றம்,
சங்கரன்கோவில்.
A.S.No.26/2019

ராஜேஸ்வரி, க.பெ.ஜெயசந்திரன்,
கதவு எண்.8/69B, மேற்கு தெரு,
ரெட்டியப்பட்டி அஞ்சல்,
சோலைசேரி,
சங்கரன்கோவில் தாலுகா,
மேல்முறையீட்டாளர்,

எதிர்

1.கல்யாணி, க.பெ.பிரேம்குமார்,
கதவு எண்.1/37C,
காமராஜபுரம், R.R.நகர், சேடப்பட்டி அஞ்சல், விருதுநகர் தாலுகா, விருதுநகர் மாவட்டம்
2. சுப்புலெட்சுமி,
க.பெ.பாலகிருஷ்ணன்,
கதவு எண்.174E/9 மேற்கு தெரு,
கன்னித்தேவன்பட்டி, கீழராஜகுலராமன் அஞ்சல், இராஜபாளையம் தாலுகா,
7 மற்றும் 14 எதிர்மனுதார்கள்

அறிவிப்பு

மேற்படி நிர் மேல்முறையீட்டு வழக்கில் 7 மற்றும் 14ம் எதிர்மனுதார்களாகிய தாங்கள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி வரும் 24.10.2025 தேதியில் வாய்தா ஏற்பட்டுள்ளது. எனவே தாங்கள் மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி வாய்தா தேதி அன்று காலை 10மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் தெரிவித்து போக வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கானது தங்களுக்கு எதிராக ஒருதலை பட்சமாக தீர்மானிக்க படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஏதேனும்

நீதிமன்ற உத்தரவுபடி
S.புஷ்பராஜ்., M.A.,B.L.,
S.மாதவராம்., B.Sc.,B.L.,
வழக்கறிஞர்கள், சங்கரன்கோவில்.

---

வருவாய் கோட்டாட்சியர்,
திண்டுக்கல்.
இ.ப.வ.எண்.7290/25/ஆ6
நாள்:05.08.2025
ந.க.எண்.5011/2025/அ2
நாள்:24.09.2025

சுப்பிரமணி, த/பெ.ராமசாமி,
ரெங்கசமுத்திரப்பட்டி,
தோட்டனூத்து கிராமம்,
திண்டுக்கல் கிழக்கு வட்டம். ......
......மனுதார்

-எதிர்-

வருவாய் கோட்டாட்சியர்,
திண்டுக்கல்.
....எதிர்மனுதார்

அறிவிப்பு

மேற்கண்ட எண் வழக்கில் மனுதாரின் பெரியம்மா மீனாட்சியம்மாள் என்பவர் தோட்டனூத்து கிராமத்தில் கடந்த 17.08.1999-ம் தேதி இறந்து விட்டார். ஷையாரின் இறப்பினை பதிவு செய்ய வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் 15 நாட்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவிக்க வேண்டியது. தவறும்பட்சத்தில் மனுவானது மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

மனுதாரர் பெயர் மற்றும் முகவரி
சுப்பிரமணி, த/பெ.ராமசாமி,
ரெங்கசமுத்திரப்பட்டி,
தோட்டனூத்து கிராமம்,
திண்டுக்கல் கிழக்கு வட்டம்.

---

வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
திண்டுக்கல்.
ந. க. எண்.8037/2025/ஆ6
இ.ப. வ.எண்.155/2025/ஆ6

சந்திராம்மாள் , த/பெ.கண்ணன் ,
6-2-3c,நாகலாபுரம்,
சேவுகம்பட்டி கிராமம்,
நிலக்கோட்டை வட்டம் ,
திண்டுக்கல் மாவட்டம்
... மனுதாரர்

எதிர்

வருவாய் கோட்டாட்ச்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி நிர் மனுதாரரின் மாமனார் சுப்பையன் கடந்த 10.05.2012 ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்.

---

வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
திண்டுக்கல்.
ந. க. எண்.9352/2025/ஆ6
இ.ப. வ.எண்.321/2025/ஆ6

V. S. காளீஷ்வரன் ,
த/பெ.சண்முகம் பிள்ளை ,
3/113,பிள்ளையார் கோவில் தெரு,
முத்தாலபுரம், எத்திலோடு கிராமம்,
நிலக்கோட்டை வட்டம் ,
திண்டுக்கல் மாவட்டம்
... மனுதாரர்

எதிர்

வருவாய் கோட்டாட்ச்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி நிர் மனுதாரரின் பாட்டி ராக்காயி அம்மாள் கடந்த 31.10.1998 ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்.

